மாவட்டங்கள்—தொடர்ச்சி	ஆண்	பெண்
கோயம்புத்தூர்	135	20
சேலம்	140	15
திருநெல்வேலி	98	10
கன்னியாகுமரி	104	10
நீலகிரி	71	8
தஞ்சாவூர்	190	20
தர்மபுரி	83	7
இராமநாதபுரம்	108	10
மொத்தம்		

*** 740 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் அணியில் தற்போது பயிற்சி பெற்று வரும் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நியமன உத்தரவு அனுப்பப்பட்ட 1,800 இளைஞர் அணி ஆண் தொண்டர்களில் கிராம விஸ்தரிப்பு நிலையங்களில் 1,643 ஆண் தொண்டர்கள் பயிற்சியினை முடித்து தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களுக்கு ஆக்கபூர்வமான சமூகத் தொண்டாற்ற அனுப்பப்பட்டுள்ளனர்.

நியமன உத்தரவு அனுப்பப்பட்ட 200 இளைஞர் அணி பெண் தொண்டர்களில் 193 தொண்டர்கள், சென்னை சமூக பள்ளியில் சேர்ந்து பயிற்சி முடித்து, அரசு மற்றும் தனியார் துறை நிலையங்களுக்கு சமூகத் தொண்டாற்ற அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் பெண் தொண்டர்கள் எல்லாருமே சென்னையில்தான் பயிற்சி பெற்றார்கள் என்று அறிகிறேன். அவர்களை அந்தந்த மாவட்டத்தில் அவர்களுக்குச் சௌகரியமான இடத்திலேயே மாற்றி, பணி கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெண் தொண்டர்களைப் பரவலாகக் கிராமப் பகுதிகளுக்கு அனுப்புவது உசிதம் இல்லை என்ற காரணத்தினால் பெண் தொண்டர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகள், கண்ணிழந்தோர் பள்ளிகள், செவிடர் பள்ளிகள், தொழுநோய் தடுப்பு நிலையங்கள் ஆகிய இடங்களுக்குப் பணி புரிய அனுப்பப்படுகிறார்கள். மாவட்ட அளவில் பரவலாக அனுப்பப்படுகிறார்கள்.

...

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இளைஞர் அணி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதலாவதாக நமது தமிழக அரசின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுகொண்டு வருகிறது. இந்த அணிக்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் வழங்குகிறதா? இல்லையென்றால், கேட்டுப் பெறுவதற்கு நமது அரசு முயற்சி ஏதேனும் மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசு இதுவரையில் எந்த மானியமும் வழங்கவில்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல், மாநில அரசு மத்திய அரசை இந்த இளைஞர் அணியின் செலவுக்காத் தொகை கேட்டிருக்கிறது. வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக மத்திய அரசு 25 கோடி ரூபாய் அளவுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறது. அதில் இரண்டரைக் கோடி ரூபாய் அளவுக்கு இதுபோன்ற காரியங்களுக்கு, குறிப்பாக இளைஞர் அணி போன்றவைகளுக்குத் தேவை என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. இப்பொழுது மத்திய அரசின் செலவில் இது நடைபெறவில்லை. மாநில அரசே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு இளைஞர் அணியை நடத்துகிறது. இதனால் ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட அறுபது லட்ச ரூபாய் மாநில அரசுக்குச் செலவாகிறது.

திரு. கா. காளிமுத்து : இளைஞர் அணி மேலும் விரிவுபடுத்தப் படுமா என்பதையும் இரண்டு திங்களுக்கு ஒரு முறையாவது அவர்களை ஒன்றாகக் கூட்டி அரசின் கொள்கைகளை அவர்களுக்கு விளக்கிக் கூறுவதோடு, இராணுவக் கட்டுக்கோப்பினை உருவாக்கி, துப்பாக்கிப் பயிற்சி அளிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

[1972 மார்ச் 28

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவர்கள் கிராமப் புறத்தில் சமுதாயப் பணியை நிறைவேற்றுவதற்காக இப்பொழுது தங்களுடைய தொண்டினை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, முதியோர் கல்வித் திட்டம், கிராமங்களில் சுற்றுப்புறச் சுகாதாரம், கிராம இளைஞர் சங்கங்களை ஏற்படுத்துதல், தீண்டாமை உட்பட சமூக அநீதிகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தல், நவீன அறிவியல் நோக்குடன் வேளாண்மை மற்றும் பல பிரச்சினைகளை அணுகுதல் ஆகியவை போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை மேலும் விரிவாக்குவதற்கான திட்டம் அரசினிடத்தில் இருக்கிறதென்றாலும், நிதி நிலைக்கு ஏற்றவாறு அது விரிவாக்கப்படும்.

திரு. பி. எஸ். மணியன்: இந்த அணிக்கு 'இளைஞர் அணி' என்று பெயர் இருப்பதால், எந்த வயதுவரையுள்ளவர்கள் இந்த அணியில் பணியாற்றலாம் என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே பட்டதாரிகளாக இருப்பவர்கள், வேறு வேலைகள் கிடைத்து அந்த வேலைகளுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலையில் இப்போதே அவர்கள் அந்த வேலைகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். அதுவரையில் இந்த அணியில் இருக்கலாம். பட்டதாரிகளாக இருந்து வேலை ஏதும் இல்லாமலிருப்பவர்கள் முதலில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய பணி இரண்டாண்டுக் காலம் என்று இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. அதை சற்று நீட்டித்து மேலும் இதிலே இன்னும் ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் இந்த ஆண்டு இணைத்துக்கொள்வதற்கும் சில திட்டங்கள் இருக்கின்றன. அவை பரிசீலனையில் இருக்கின்றன. இதிலே வயது ஒன்றும் குறிப்பிட்டு வரையறுத்துச் சொல்ல இயலாது. நான் சொன்ன விளக்கங்களே அதற்குப் போதுமானதாகும்.

திரு. என். இராஜாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணி தொடர்ந்து நடைபெறவும், பயிற்சி பெறவும் வாய்ப்பு இருக்கிறதா ? ஆண்கள் பட்டதாரிகளாக உள்ளவர்கள் இதிலே இருக்கிறார்கள் என்றாலும் பெண்கள் பட்டதாரி ஆகாமல் இருந்து பி.யு.சி. அல்லது எஸ்.எஸ்.எல்.சி. தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவர்களையும், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தகுதியைக் குறைத்து, அதிலே சேர்த்துக்கொள்வதற்கு திட்டமுண்டா ?

1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்கு தனித் தனியாகத் திட்டங்கள் இருக்கலாம். பட்டதாரிகள், தொழில் நுட்பத் தகுதியுள்ள பட்டதாரிகளுக்குத்தான் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த இளைஞர் அணியில் இருப்பவர்களுக்கு என்ன என்ன அடிப்படையில் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று விதிமுறைகள் இருக்கிறதா? இருந்தால் எவ்வளவு என்று கூற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் படித் திருப்பதால் சம்பளம் என்று நாம் எதையும் நிர்ணயிக்கவில்லை. மாதம் ஒன்றுக்கு அவர்கள் ஆற்றுகின்ற பணிச் செலவுகளுக்கு என 175 ரூபாய் மதிப்பு ஊதியம் தரப்படுகிறது.

Post of Deputy Inspector-General of Police

* 741 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint a Deputy Inspector-General of Police (Services); and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ), (இ) காவல்துறை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1—9—71 முதற் கொண்டு காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் ரூ. 1,600–100–2,000 சம்பள விதத்தில், காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) முன்னரே நியமிக்கப் பட்டுள்ளார். அவரிடம் கீழ்க்கண்ட பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன :

(*a*) சீரமைப்புச் செயற்குறிப்புகள், ஆட்படை ஊற்றத் திட்டம்.

(*b*) தற்போதுள்ள பணி விதிகளில் மாற்றம், புதுப்பணி விதிகள் வகுத்தல்.

(*c*) புதிய தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்.

(*d*) காவல்துறை கணிப்புப் பொறிப் (Computer) பிரிவு.